1973 நவம்பர் 21]

பெயரில் 1,540 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களை மாடுகள் இல்லாமல் காடுகளாக வளர்ப்பது அரசு கவனத்திற்கு வந்திருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அது பற்றிய தகவல் தற்பொழுது என்னிடத்திலே இல்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அது பால் பண்ணைக்காக அமைக்கப்பட்ட இடம் அல்ல. கால்நடை வளர்ப்புக்காகவே உருவாக்கப்பட்டது. அது அனிமல் ஹஸ்பன்ட்ரி இலாகாவைச் சேர்ந்தது.

Loans for Nallathur Potters' Society.

* 297 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether any loan has been advanced recently by the Government to the Potters' Society, Nallathur in Tiruttani taluk ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் நல்லத்தூர் மண்பாண்டத் தொழிலாளர் சங்கத்துக்குக் கடனும் மான்யமும் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு நிதியிலிருந்து கொடுத்துள்ளது.

(இ) பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையம் கட்டுவதற்காக, 1971-72-ல் கடனாக ரூ. 12,615-ம், மான்யமாக ரூ. 8,115-ம் வழங்கப் பட்டுள்ளது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, இந்தக் கடனை வழங்கி இரண்டு ஆண்டுகள் ஆகியும் இன்னும் வேலைகள் துவங்கப் பெறவில்லை. அது மட்டும் அல்ல, அந்தப் பண்ணையிலிருந்து அந்தச் சங்கத்தின் தலைவராக இருப்பவர் ரூ. 2,000 கையாடல் செய்திருப்பதாகத் தெரிகிறது. இது குறித்து தீவிரமாக விசாரித்து, நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

[1973 நவம்பர் 21

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அந்தக் கூட்டுறவுச் சங்கத்திலே 2—5—1972-ம் ஆண்டு தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு கட்டிடம் கட்டுவதற்கு என்று சில பொருள்கள் வாங்குவதற்காக சுமார் ரூ. 1,700-ஐ மாவட்ட கதர் கிராம வாரியத்தினுடைய அதிகாரியின் அனுமதியைப் பெற்றுத்தான் அவர்கள் எடுத்திருக்கிறார்கள். அந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்குப் பொறியாளரால் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, வாரியத்தினுடைய ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. விரைவில் அந்தக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சென்னை, செங்கை பனைப்பொருள் கூட்டுறவு சம்மேளனம்

* 298 வினா—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை-செங்கை மாவட்ட பனைப்பொருள் கூட்டுறவு சம்மேளனத்தின் 1970-71-ம் ஆண்டு நிர்வாகச் செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ரூ. 71,623.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இந்தப் பனை பொருள்கள் கூட்டுறவு சம்மேளனத்தினுடைய லாபம் குறைவாகவும் நிர்வாகச் செலவுகள் அதிகமாகவும் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆகவே, நிர்வாகச் செலவுகளைக் குறைத்து, லாபத்தைப் பெருக்க அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இந்த நிர்வாகச் செலவுகளைக் குறைக்க வேண்டுமென்ற வகையிலே கடந்த ஒரு மாத காலத்திற்கு முன்பு நம்முடைய வாரியத்தின் மூலம் ஒரு முடிவு எடுத்துள்ளோம். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு சம்மேளனம் தனியாக இருப்பதை மாற்றி, அதைக் கலைத்துவிட்டு, தனியாகவே ஒரு ரீஜியனல் பெடரேஷன் என்று வைத்து, இரண்டு ஜில்லாக்கள் அல்லது 3 ஜில்லாக்களைச் சேர்த்து வைத்து, மாநிலம் பூராவும் நான்கு பெடரேஷன்கள் வைத்து அதேபோல், மாநிலத்திற்கென்று தனியாக ஒரு பெடரேஷன் இல்லாமல், அட்வைசரி போர்டு மட்டும் வைத்து நிர்வாகச்